முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள், திங்கட்க்கிழமை
IA.No.1/2023
இன்
அசல் வழக்கு எண்.93/2012
-----

1) தமிழரசன்
2) முத்து
3) பாண்டி
4) முத்து ... மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்கள்/ 4 முதல் 7 உத்தேச பிரதிவாதிகள்

/ எதிர்/

1) சீதாலெட்சுமி ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி

2) தாசில்தார், திருமங்கலம்.
3) வருவாய் கோட்டாட்சியர், உசிலம்பட்டி
4) தமிழ்நாடு அரசு மூலம் அதன் மாவட்ட ஆட்சியர், மதுரை

... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 25.09.2025ம் தேதி இன்று என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப்

பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது உத்தேச 1 முதல் 4 வரையிலான மனுதாரர்களை தாவா பிராதில் 4 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் தரப்பில் கட்டளை 1 விதி 10(2) மற்றும் விதி 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1) அசல் வழக்கானது கடந்த 2012ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் வழக்கில் மனுதாரர்களை 4 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்மானிக்க வேண்டிய விசயம் :**

3. இந்த மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு**</u> **:**

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், அசல் வழக்கு எண்.93/2012ல் மனுதாரர்களை 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டுமா என்பதே ஆகும். இந்த மனுவானது கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் அவர்களது மனுவினை நிரூபிக்கும் பொருட்டு வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், இந்நிர் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர்கள் இம்மனுவில், OS எண்.154/11 மற்றும் 93/2012 இல் உள்ள இரண்டு வழக்குகளிலும் பொருள் மற்றும் தகராறு ஒன்றுதான் என்றும், மேலும் இரண்டு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் OS.No.93/2012 இல் உள்ள தற்போதைய வழக்கின் நடவடிக்கைகளில் தாங்கள் எந்தத் தரப்பினரும் இல்லை என்றும், மேலும், வாதி வழக்குச் சொத்தின் மீதான தங்கள் உரிமையை அடக்கி, தற்போதைய வழக்கில் தங்களை கட்சிகளாக

சேர்க்கவில்லை என்றும், எனவே, சர்ச்சையில் உள்ள விஷயத்தின் முக்கிய அம்சத்தை முடிவு செய்வதற்கும், வழக்குச் சொத்தின் மீதான தங்கள் உரிமை மற்றும் உடைமையை நிறுவுவதற்கும், தற்போதைய வழக்கில் தாங்கள் முற்றிலும் தேவையான நபர்கள் என்றும், எனவே 1 முதல் 4 மனுதாரர்களை OS எண்.93/2012 இல் 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. எனவே, மேற்படி பிரதிநிதித்துவ அடிப்படையில் இந்நிர் 1 முதல் 4 மனுதாரர்களை 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்தவேண்டும் என்று கூறியுள்ள மனுதாரர்கள் தரப்பு வாதத்தினை கருத்தில்கொண்டும், இந்நிர் 1 முதல் 4 மனுதாரர்கள்/4 முதல் 7 உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கும்பொருட்டு, அசல் வழக்கின் ஒரு முழுமையான தீர்வுக்கு கொண்டு வருவதற்கும், வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு இம்மனுவினை அனுமதிப்பது ஒரு காரணியாக அமையும் என்பதை கருத்தில்கொண்டும் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 13.10.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.13 16:27:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

**இணைப்பு** :

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
2. **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.13 16:27:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

I.A.No. 1/2023
in
O.S.No.93/2012
Order
D.D. 13.10.2025